செய்தி வெளியீடு எண். 148 நாள்.13.2.2010

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

# செய்தி வெளியீடு – 13.02.2010

சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் தேயிலைத்தூளில் அதிக அளவில் கலப்படம் நடைபெறுவதாக அரசுக்கு புகார் கடிதங்கள் வந்தன. அதன் அடிப்படையில், உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் தேயிலைத்தூள் விற்கும் நிறுவனங்களை திடீர் தணிக்கை செய்து, தவறு செய்யும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது சுகாதாரத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார். அரசின் அறிவுறுத்தலின் பேரில், பொது சுகாதாரத் துறை அலுவலர்களும், மத்திய அரசின் தேயிலை வாரியத்தின் அலுவலர்களும் இணைந்து இன்று (13.02.2010) மேற்கண்ட மாவட்டங்களில் தேயிலைத்தூள் விற்கும் நிறுவனங்களில் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டனர். அதிகாரிகளின் சோதனையின் போது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீவிநாயகா ஏஜென்சீஸ், காஜாமலை மற்றும் ராஜலட்சுமி ஏஜென்சீஸ், உறையூர் ஆகிய இரண்டு நிறுவனங்களும், மதுரை மாவட்டத்தில் ராஜா ஏஜென்சீஸ், ஆத்திகுளம் மற்றும் செல்வம் காபி / டீ கம்பெனி, ஆரப்பாளையம் ஆகிய இரண்டு நிறுவனங்களும், சேலம் மாவட்டத்தில் டாப்சன் டீ டிரேடர்ஸ் மற்றும் திருமலை என்டர்பிரைசஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் உள்ள சக்தி டிரேடர்ஸ், கணேஷ் டீ டிரேடர்ஸ் மற்றும் டாப்சன் டீ டிரேடர்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்களும் தேயிலைத்தூளில் கலப்படம் செய்து விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது, அந்த நிறுவனங்கள் மூடி சீல் வைக்கப்பட்டன. இந்த நிறுவனங்கள் மீது சட்டப்படி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திடீர் ஆய்வின் போது மதுரை மாநகராட்சிக்குட்பட்ட தேயிலைத்தூள் விற்பனை செய்த நிறுவன உரிமையாளர்கள் சிலர் கடைகளை மூடிவிட்டு ஓடிவிட்டனர்.

வி.கு. சுப்புராஜ்
முதன்மைச் செயலாளர்

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.